**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 35 of 2025**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சின்னசாமி** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.15.05.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது கூடலூரில் வசித்து ஆடு, மாடு மேய்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 யை எனக்கு தெரியும். அவர் எனது மனைவி ஆவார். சுமார் 2 வருடத்திற்கு முன்பு மதியம் ஒரு மணியளவில் கூடலூரில் உள்ள சோளக்காட்டில் ஆடு, மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி அந்த இடத்திற்கு வந்து குச்சியை வைத்து தலையின் பின்புறத்தில் என்னை அடித்தார். அவர் அடித்ததில் நான் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டேன். நான் இலால்குடி அரசு மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற்றுக் கொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இந்த வழக்கில் புகார் என்னால் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். எனது மனைவி கொடுத்தார். சம்பவம் நடைபெறும் போது எனது மனைவி சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தை எனது

மனைவி நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கும், எதிரிக்கும் இடையே இடப்பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. நானும், எதிரியும் ஒரே தெருவில் வசிக்கிறோமா என்றால் இல்லை. நான் மது அருந்திவிட்டு கீழே விழுந்ததால் தான் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி எந்த வழக்கு சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும், எதிரிக்கும், வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், எனக்கும் ஏற்கனவே உள்ள முன்விரோதத்தின் காரணமாக எனது மனைவி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருக்கும் போது போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் ஞாபகமில்லை. எனக்கு உண்மையிலேயே காயங்கள் ஏற்பட்டிருந்தால் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது போலீசார் என்னை விசாரணை செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.05.15 11:49:48 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 35 of 2025**

**Prosecution Witness : PW4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ரவி** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.15.05.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறுவயலூரில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் என்னுடைய கையொப்பம் இல்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)**– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.05.15 11:50:08 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 35 of 2025**

**Prosecution Witness : PW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ராஜ்குமார்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.15.05.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது வந்தலை கூடலூரில் வசித்து வந்து ஆந்திராவில் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 எனது அம்மா, அப்பா ஆவார்கள். கடந்த 2024ம் வருடம் பிப்ரவரி மாதம் நான் ஆந்திராவில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். எனது அம்மா சம்பவம் நடந்த அன்றே மாலை 5 மணியளவில் எனக்கு போன் செய்து அகஸ்டின் என்பவர் அப்பாவை அடித்துவிட்டார் எனவும், அதை கேட்க சென்ற தன்னையும் அடித்துவிட்டார் எனவும், தனக்கு கையில் காயம் ஏற்பட்டது எனவும், இலால்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றறேன் எனவும் சொன்னார். மறுநாள் எனது அப்பா, அம்மாவை நான் வீட்டில் வந்து பார்த்தேன். அம்மாவிற்கு கையில் காயம் ஏற்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அம்மா உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக புகார் யாரால் கொடுக்கப்பட்டது என்றால் நானும், அம்மாவும் கொடுத்தோம். எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.05.15 11:50:15 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி